JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - PW- 5 Witness
for Prosecution

| CC. No. | 16/2024 | Crime No. | | Station | |
|---|---|---|---|---|---|

| | | |
|---|---|---|
| Name | **Pw5 அஜித் குமார்** | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 18th day of February 2026. | | |

**எதிரி ஆஜர் இல்லை**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஓடை மேட்டில் குடியிருந்து கொண்டு, வெல்டிங் ஒர்க் ஷாப் வைத்து நடத்தி வருகிறேன். கடந்த நான்கு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மாலை நேரத்தில், ஓடைமேடு பஸ் ஸ்டாப் அருகில் விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். பின்னர் நான் விபத்து நடந்த இடத்திற்கு சென்றேன். ஆம்புலன்ஸ் வந்ததற்கு பின்னர்தான் நான் அங்கு சென்றேன். என்னை போலீசார் எந்த ஊர் என்று விசாரித்தார்கள். போலீசார் எனது பெயர் முகவரியை மட்டும் கேட்டு எழுதிக் கொண்டார்கள். யாருக்கு விபத்து நடந்தது என்று நான் எதுவும் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

கடந்த 23.10.2023 ஆம் தேதி மாலை 6:15 மணிக்கு சக்தி – அந்தியூர் பவானி மெயின் ரோடு அத்தாணி, ஓடைமேடு சொக்ககவுண்டன் வீட்டு எதிரில் நானும் தினேஷ்குமார், கார்த்திகேயன் மற்றும் மோகன்ராஜ் ஆகிய நான்கு பேரும் நின்று வேலை சம்பந்தமாக பேசிக் கொண்டிருந்தோம் என்றும், அப்போது பின்னர் கேட்டு தெரிந்த கள்ளிப்பட்டியைச் சேர்ந்த சதீஷ் என்பவரும், பவானி கீரைக்கார வீதியைச் சேர்ந்த சிவக்குமார் (35) என்பவரும் பவானி செல்வதற்காக TN 36 AF 43 58 என்ற

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.18 06:39:55 +0530

பதிவெண் கொண்ட TVS அப்பாச்சி இருசக்கர வாகனத்தை சதீஷ் ஓட்ட, சிவக்குமார் பின்னால் உட்கார்ந்து கொண்டே மேற்படி ரோட்டின் இடதுபுறம் ஓரமாக மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி விபத்தை தடுக்கும் பொருட்டு வைத்திருந்த பேரிகாடை தாண்டி ரோட்டில் இடதுபுறம் சென்று கொண்டிருந்தார்கள் என்றும், அப்போதே அவர்களுக்கு எதிரே கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த பின்னர் தெரிந்த TN 33 C 50 06 என்ற பதிவு எண் கொண்ட டெய்லருடன் கூடிய கரும்பு டிராக்டர் வண்டியை வலது புறம் ஏறி ஓட்டி வந்த வரப்பள்ளம், பெருமுகை புதூரை சேர்ந்த தேவராஜ் என்பவர் அதிவேகமாகவும், ஆரன் அடிக்காமலும், ஓட்டி வந்து சதீஷ் வண்டியின் மீது மோதினார் என்றும், அதில் இருவரும் ரோட்டில் வண்டியுடன் விழுந்து விட்டார்கள் என்றும், விபத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும், சதீஷ்குமாருக்கு வலது இடது கண்ணுக்கு அருகில் ரத்தக்காயமும், வலது மார்புக்கு மேல் ரத்தக்காயமும், வலது மார்பு கரையில் மொக்கை அடியும், இடது கணுக்காலில் பலத்தடியும் வலது கால் முலியில் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டு பின்னால் உட்கார்ந்து வந்த சிவக்குமாருக்கு முன்னேற்றி மூக்கு வாயில் ரத்தக்காயமும், இடது முழங்காலில் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டுவிட்டது என்றும், நான் தகவல் சொல்லவே சதீஷின் பெரியப்பா மகன் பாலமுருகனும், சிவகுமாரின் உடன் பிறந்த பாலகிருஷ்ணனும், விபத்து நடந்த இடத்திற்கு வந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் விபத்தில் காயம்பட்டிருந்த இருவரையும் கோபி அரசு மருத்துவமனைக்கு கூட்டி சென்றார்கள் என்றும், போலீசார் விசாரணையின் போது சொல்லிவிட்டு, தற்போது எதிரி கேட்டுக் கொண்டதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.18 06:40:03 +0530

Sd/- (J.RAJKUMAR)

Judicial Magistrate No.1, Bhavani